# தமிழ் இசைச் சங்கம்

இராஜா அண்ணாமலை மன்றம்
சென்னை – 600 104.
தொலைபேசி : 044-25341425 / 25341958 / 29550107 / 9282235964

## <u>இசைப் போட்டிகளுக்கான விவரங்கள்</u>

### 1. நாகசுரப் போட்டி

திருமதி சீதை ஆச்சி அவர்களின் நினைவாக திருமதி உண்ணாமலை ஆச்சி அறக்கட்டளை நிறுவியது
பரிசு தொகை ரூ. **1000.00**

இப்போட்டியில், ஒருவர் மட்டுமே நாகசுரம் வாசிக்க வேண்டும், துணைக் கருவிகளாகச் சுருதிப்பெட்டி, கைத்தாளம், தவுல் (ஒன்று) ஆகியவை அனுமதிக்கப்படும். வர்ணம், இராக ஆலாபனை, கீர்த்தனை, நிரவல், கற்பனைச் சுரங்கள் மற்றும் ராகம், தாளம், பல்லவி ஆகியவை போட்டியில் கேட்கப்படும், நிகழ்ச்சிப் பட்டியலில் மூன்று வர்ணங்கள், பத்துக் கீர்த்தனைகள், மூன்று இராகம், தாளம், பல்லவி ஆகியவை குறிக்கப்பட்டிருக்க வேண்டும்,

போட்டியாளருக்கு முப்பது நிமிடங்களிலிருந்து நாற்பத்தைந்து நிமிடங்கள் வரை வாசிக்க நேரம் கொடுக்கப்படும்.

### 2. தவில் போட்டி

தமிழ் இசைச் சங்கம் நிறுவியது
பரிசு தொகைரூ. **1000.00**

இப்போட்டியில் கலந்துகொள்ளும் கலைஞருடன் ஒரு நபர் தாளம் போடுவதற்கு அனுமதிக்கப்படுவார். கைத்தாளம் எடுத்து வரவேண்டும். ஒவ்வொரு கலைஞருக்கும் வாசிக்க 20 நிமிடம் ஒதுக்கப்படும்.

போட்டியில் கலந்துகொள்பவர்கள் 10 தாளங்களின் விவரங்களைக் கொடுக்க வேண்டும். மேற்படி 10 தாளங்களில் நடுவர் கேட்கும் தாளத்தில் தனி ஆவர்த்தனம் வாசிக்க வேண்டும்.

### 3. வீணைப் போட்டி

டாக்டர் எஸ்.இராமநாதன் அவர்கள் நினைவாக
தென்னாப்பிரிக்கா திரு.சுப்பிரமணிய பக்கிரியாப்பிள்ளை அவர்கள் நிறுவியது
பரிசு தொகை ரூ. **2000.00**

நிகழ்ச்சிப் பட்டியலில், குறைந்தது மூன்று தமிழ் வர்ணங்கள், ஐந்து தமிழ்க் கீர்த்தனைகள் (இராகம், கற்பனைச் சுரங்களுடன்) இரண்டு தமிழ்ப் பல்லவிகள் ஆகியவற்றிற்குரிய இராக, தாளத்துடன் விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். கால அளவு : 10 நிமிடங்களிலிருந்து 15 நிமிடங்கள் வரை.

### 4. வயலின் போட்டி

லால்குடி திரு.கோபாலய்யர் அவர்கள் நினைவாக, இசைப்பேரறிஞர் லால்குடி திரு.ஜி.ஜெயராமன் அவர்கள் நிறுவியது மற்றும் பேராசிரியர் பி.சாம்பமூர்த்தி அவர்கள் நினைவாகவும், தமிழ் இசைச் சங்கம் நிறுவியது

பரிசு தொகை **வயலின்**

போட்டியாளர்கள், நிகழ்ச்சிப் பட்டியலில் மூன்று தமிழ் வர்ணங்கள், ஐந்து தமிழ்க் கீர்த்தனைகள் (இராகம் கற்பனைச் சுரங்களுடன்) இரண்டு தமிழ்ப் பல்லவிகள் ஆகியவற்றை அவற்றிற்குரிய இராக, தாளங்களுடன் குறிப்பிட வேண்டும்.

சுருதிக்குத் தம்புரா அல்லது சுருதிப்பெட்டி பயன்படுத்திக் கொள்ளலாம். நேரம் : 10 நிமிடங்களிலிருந்து 15 நிமிடங்கள் வரை

### 5. மிருதங்கப் போட்டி

திரு.என்.எஸ்.ராஜன் அவர்கள் நினைவாக திரு.ஆர்.கே.பாரதி அவர்கள், திருமதி பழநிச்சாமி நாயுடு அவர்கள் நினைவாக கோவை திரு.ஏ,எஸ், செல்வராஜ் பழநிச்சாமி அவர்கள் நிறுவியது மற்றும் உமையாள்புரம் திரு.சிவராமன் அவர்கள் நிறுவியது
பரிசு தொகை ரூ. **2000.00**

நடுவர்கள் குறிப்பிடுகின்ற தாளத்தில், போட்டியாளர்கள் தனி ஆவர்த்தனம் வாசிக்க வேண்டும். கால அளவு 10 நிமிடங்களிலிருந்து 15 நிமிடங்கள் வரை

### 6. தேவாரம், திருவாசகம், திருவெம்பாவை, திருத்தாண்டகம் மற்றும் திருவருட்பா பாடல்கள்

திருமதி சீதை ஆச்சி அவர்களின் நினைவாக திருமதி உண்ணாமலை ஆச்சி, சிட்னி (ஆஸ்திரேலியா) தமிழ் சங்கம், திருமதி வாசுகி அவர்கள் நினைவாக திருமதி பொன்முடி இராஜசேகர் அவர்கள் நிறுவியது மற்றும் தமிழ் இசைச் சங்கம் நிறுவியது

பரிசு தொகை ரூ. **3000.00**

நிகழ்ச்சிப் பட்டியலில், மூவர் தேவாரத்திலிருந்து குறைந்தது பன்னிரெண்டு பாடல்களின் பெயர்களும், பண்களும் குறிக்கப்பட்டிருக்க வேண்டும். போட்டியாளர் தம்புரா சுருதியுடன் அல்லது சுருதிப்பெட்டியுடன் பாடலாம். கைத்தாளமும் பயன்படுத்திக் கொள்ளலாம். போட்டியாளர்கள், முப்பது நிமிடங்கள் பாடுவதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும்.

மூவர் தேவாரம் பன்னிரண்டு பாடல்களும் வெவ்வேறு பண்களிலும் வெவ்வேறு தாளங்களிலும் இருத்தல் வேண்டும்.

## 7. திவ்வியப் பிரபந்தம், திருப்பாவை பாடல்கள்

திரு.அழ.சித, அழ.அலமேலு ஆச்சி அவர்களின் நினைவாக திரு,அழ,சிதம்பரம், திரு.கே.ஏ.ராமப்பிரியா அவர்களின் நினைவாக திரு.கே.ஏ.துரைசாமி

பரிசு தொகை ரூ. **2000.00**

நிகழ்ச்சி பட்டியலில் பன்னிரு ஆழ்வார்களின் பாடல்களில் குறைந்தது ஐந்து பாடல்கள் வெவ்வேறு பண்களில், தாளங்களில் குறிக்கப் பெறல் வேண்டும். நேரம் : 10 நிமிடங்கள்

## 8. திருப்புகழ்ப் பாடல்கள் மற்றும் திருத்தணி திருப்புகழ்ப் பாடல்கள்

தேவகோட்டை திரு.ஏ.எல்.எஸ்.டி. அழகப்பச் செட்டியார் அவர்களின் நினைவாக திரு.ஏ.எல்.வடிவேலு, திருமதி மீனாட்சி ஆச்சி அவர்களின் நினைவாக பேராசிரியர் லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார், திருமதி பார்வதி வேலய்யா அவர்கள் நினைவாக திரு.பி.எஸ். வேலய்யா அவர்கள் நிறுவியது

பரிசு தொகை ரூ. **2000.00**

நிகழ்ச்சிப் பட்டியலில், குறைந்தது ஆறு திருப்புகழ் பாடல்கள் வெவ்வேறு இராகங்களில், தாளங்களில் குறிக்கப்பெறல் வேண்டும். நேரம் : 10 நிமிடங்கள்

## 9. மாரிமுத்தாப்பிள்ளை, அருணாசலக்கவிராயர், முத்துத்தாண்டவர் பாடல்கள் போட்டி

தென்சென்ன இராகதரங்கிணி அறக்கட்டளை மற்றும் பேராசிரியர் திருப்பாம்புரம் சுவாமிநாதப்பிள்ளை அவர்களின் நினைவாக டாக்டர் சீர்காழி எஸ். கோவிந்தராஜன் அவர்கள் நிறுவியது

பரிசு தொகை ரூ. **2500.00**

போட்டியாளர்கள், நிகழ்ச்சிப் பட்டியலில் மேலே குறிக்கப்பட்ட பாடலாசிரியர்கள் இயற்றியுள்ள பாடல்களில், குறைந்தது ஆறு பாடல்கள் பெயரையும் அவற்றிற்குரிய இராகம், தாளங்களுடன் குறிப்பிட வேண்டும். நேரம் : 10 நிமிடங்கள்

## 10. கோபாலகிருஷ்ண பாரதியார் பாடல்கள்

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் நினைவாக அண்ணாமலை வள்ளல் அறக்கட்டளை நிறுவியது பரிசு தொகை **தம்புரா**

நிகழ்ச்சிப் பட்டியலில், கோபாலகிருஷ்ண பாரதியார் இயற்றிய பாடல்களில் எட்டுப் பாடல்களை அவற்றிற்குரிய இராக, தாளங்களுடன் குறிப்பிட வேண்டும். இப்பாடல்களில் நான்கு பாடல்களுக்காவது இராகம், கற்பனைச்சுரம் பாடத் தெரிந்திருக்க வேண்டியது அவசியம். நேரம் : 15 நிமிடங்கள்

## 11. கோடீச்சுவர அய்யர், இலட்சுமணப் பிள்ளை பாடல்கள், மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாடல்கள், பாபநாசம் சிவன் பாடல்கள், தண்டபாணி தேசிகர், பெரியசாமி தூரண் பாடல்கள் தமிழ்ப் பாடல்கள்,

திருமதி.ருக்மணி ராமமூர்த்தி அவர்களின் நினைவாக காசி சாரிடபிள் டிரஸ்ட், டாக்டர் எம்.ஏ.சிதம்பரம் அவர்கள், தென்னாப்பிரிக்கா திரு.சுப்பிரமணிய பக்கிரியாப் பிள்ளை அறக்கட்டளை, திருமதி.பழநிச்சாமி நாயுடு அவர்கள் நினைவாக கோவை திரு.ஏ.எஸ்.செல்வராஜ் பழநிச்சாமி அவர்கள், இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் நினைவாக தமிழ் இசைச் சங்கம்

நிறுவியது பரிசு தொகை ரூ. **2500.00**

நிகழ்ச்சிப் பட்டியலில், குறைந்தது எட்டுப் பாடல்கள் வெவ்வேறு இராகங்களில், தாளங்களில் குறிக்கப்பட்டிருக்க வேண்டும். நேரம் : 10 நிமிடங்கள்

## 12. தமிழ்ப் பதங்கள் மற்றும் பதவர்ணங்கள் போட்டி

திரு.எஸ்,ஸ்ரீராமன் அவர்கள் நினைவாக டாக்டர் எம்.ஏ.சிதம்பரம் மற்றும் டாக்டர் சர்.ராக.க.சண்முகம் செட்டியார் அவர்கள் நினைவாக தமிழ் இசைச் சங்கம்

நிறுவியது பரிசு தொகை ரூ. **2000.00**

இப்போட்டியில் கலந்துகொள்வோர் நிகழ்ச்சிப் பட்டியலில், குறைந்தது ஐந்து தமிழ்ப் பதங்கள் இரண்டு பத வர்ணங்கள் ஆகியவற்றின் பெயர்களை இராகம், தாளம், பாடலாசிரியர் முதலிய விவரங்களுடன் தெளிவாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

நேரம் : 10 நிமிடங்கள்

## 13. குறவஞ்சி பாடல்கள்

திரு.பி.வி.கே.ஆர் காயாரோகணம் பிள்ளை அவர்கள் நினைவாக திருமதி சுசீலா மாரியப்பன் அவர்கள் நிறுவியது

பரிசு தொகை **வெள்ளிக்கோப்பை**

நிகழ்ச்சி பட்டியலில், திருக்குற்றாலக் குறவஞ்சி, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, தியாகேசர் குறவஞ்சி, மீனாட்சியம்மை குறம் ஆகியவற்றில் குறைந்தது ஆறு பாடல்கள் இராக, தாளக் குறிப்புகளுடன் நிகழ்ச்சிப் பட்டியலில் கொடுத்திருக்க வேண்டும். நேரம் : 10 நிமிடங்கள்

## 14. பரதநாட்டியப் போட்டி

கோவை திரு.வி.பழநிச்சாமி நாயுடு அவர்களின் நினைவாக திரு.வி.பாலகிருஷ்ண நாயுடு அவர்களின் அறக்கட்டளை நிறுவியது

பரிசு தொகை ரூ. **2500.00**

நிகழ்ச்சிப் பட்டியலில், ஒரு தமிழ் சுரஜதி, ஒரு தமிழ் வர்ணம் அல்லது இரு தமிழ் வர்ணங்கள், மூன்று தமிழ்ப் பதங்கள் ஆகியவை குறிப்பிட்டிருக்க வேண்டும். இருபதிலிருந்து முப்பது நிமிடக்ள் வரை ஆடுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படும். இப்போட்டியில் கலந்துகொள்ளும் கலைஞர்கள் தம் சொந்த செலவிலேயே வரவேண்டும்.

## 15. கதாகாலட்சேபம் போட்டி

திரு.சிவி. சிவிடி வெங்கடாசலம் செட்டியார் அவர்கள் நினைவாக திரு.வி.சிதம்பரம் அவர்கள் நிறுவியது

பரிசு தொகை ரூ. **5000.00**

நிகழ்ச்சிப் பட்டியலில், தமிழில் கதாகாலட்சேபம் செய்ய இரண்டு தலைப்புகளையாவது குறித்திருக்க வேண்டும். கதாகாலட்சேபத்தை தொழிலாகக் கொண்டிருப்பவர்கள். இப்போட்டியில் கலந்து கொள்ள இயலாது.

பேசும் மொழியும் பாடல்களும் முழுமையாகத் தமிழிலேயே இருக்க வேண்டும். தம்புரா அல்லது சுருதிப்பொட்டி, கைத்தாளம், சிப்ளா இவை தவிர வேறு இசைக் கருவிகள் பயன்படுத்தக் கூடாது. நேரம் : 15 நிமிடங்கள்

## 16. தாயுமானவர் பொன்னையா பிள்ளை பாடல்கள்

திருமதி கமலா அம்மாள் அவர்கள் நிறுவியது

பரிசு தொகை ரூ. **3000.00**

போட்டியாளர்கள், நிகழ்ச்சிப் பட்டியலில் மேலே குறிக்கப்பட்ட பாடலாசிரியர்கள் இயற்றியுள்ள பாடல்களில், குறைந்தது ஆறு பாடல்கள் பெயரையும் அவற்றிற்குரிய இராகம், தாளங்களுடன் பாட வேண்டும். நேரம் : 10 நிமிடங்கள்

# போட்டிகளுக்குரிய பொது விதிகள்

1. திறமையும் தகுதியும் உள்ளவர்கள் போட்டியில் சேரலாம்.
2. பாடும்பொழுதோ, இசைக்கருவிகள் வாசிக்கும் பொழுதோ தம்புரா அல்லது சுருதிப்பெட்டி தேவைப்பட்டால், தமிழ் இசைச் சங்கத்தார் அவற்றுக்கு ஏற்பாடு செய்வர்.
3. 14 வயதிலிருந்து 30 வயதிற்குட்பட்டவர்கள் இப்போட்டிகளில் கலந்து கொள்ளலாம். (அதாவது போட்டி நடைபெறும் ஆண்டின் நவம்பர் திங்கள் முதல் நொள் 14வயது முடிந்திருக்க வேண்டும் உயர்நிலை வயது 30)
4. போட்டியில் கலந்துகொள்பவர்கள் தம் வயதிற்கான சான்றிதழை விண்ணப்பத்துடன் பூர்த்தி செய்து, பள்ளித் தலைமை ஆசிரியர் அல்லது கல்லூரி முதல்வர் அல்லது அப்பதவிக்குச் சமமானவர்கள் அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற மருத்துவர்கள் ஆகியோருள் ஒருவர் ஒப்புதலும் முத்திரையும் பெற்று அனுப்ப வேண்டும். பள்ளி அல்லது கல்லூரிச் சான்றிதழ்களில் வயதிற்கான பகுதியை நகலெடுத்தும் அனுப்பலாம்.
5. போட்டிகள் அனைத்தும் சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெறும். போட்டிகள் காலையில் 10 மணிக்கு தொடங்கும்.
6. போட்டியில் கலந்து கொள்வோர் 30 நிமிடங்களுக்கு முன்னரே தயாராக இருக்க வேண்டும்.
7. நடுவர்களின் தீர்ப்பே யாவற்றிற்கும் இறுதியானது.
8. இசையையும், நாட்டியத்தையும் தொழிலாகக் கொண்டவர்கள் இப்போட்டிகளில் கலந்து கொள்ள இயலாது.
9. ஏற்கனவே ஒரு போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்கள் மீண்டும் அதே போட்டியில் கலந்து கொள்ள இயலாது.
10. ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியாக உரிய படிவத்தில் விண்ணப்பம் செய்ய வேண்டும்.
11. விண்ணப்பங்களும் விவரங்களும் கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

உதவிச் செயலர்
தமிழ் இசைச் சங்கம்
முதல்வர்
தமிழ் இசைக் கல்லூரி
இராஜா அண்ணாமலை மன்றம்,
சென்னை - 600 104.
போன் : 9282235964 / 29550107

போட்டியில் வெற்றி பெற்றவருக்கு டிசம்பர் திங்கள் 21-ஆம் நாள் நடைபெறும் தமிழ் இசை விழாவின் போது உரிய பரிசுகள் வழங்கப்படும்.